# அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

(தேசிய தரநிர்ணயக் குழுவின் மறுதர மதிப்பீட்டிலும் “ஏ”தகுதி பெற்றது)

நாள் :7.3.2017

அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் சார்பாக நடத்தப்படும் மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையேயான வாலிபால், கால்பந்து, கிரிக்கெட் ஆண், பெண் இருபாலருக்கான போட்டிகள் 3-3-2017 முதல் 5-3-2017 வரை உடற்கல்வியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.




போட்டிகளை பல்கலைக்கழக பதிவாளர் (பொ.) பேரா.வி. பாலசந்திரன் அவர்கள் தொடக்கி வைத்தார். கால்பந்து போட்டிகளில் 15 கல்லூரிகளை சார்ந்த அணிகள் பங்குபெற்றன. கிரிக்கெட் போட்டிகளில் 17 அணிகள் பங்குபெற்றன. வாலிபால் போட்டிகளில் 8 அணிகள் பங்குபெற்றன.

கால்பந்து இறுதிப் போட்டியில், ஆண்கள் பிரிவில் புனித வளனார் கல்லூரி அணியும், அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரி அணியும் விளையாடின. இதில் 1-0 என்ற கோல் கணக்கில் திருச்சி புனிதவளனார் கல்லூரி அணி வெற்றி பெற்று கோப்பையை வென்றது. பெண்கள் பிரிவில், அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரி அணியும், காரைக்குடி அழகப்பா அரசு கலைகல்லூரி அணியும் மோதின். இதில், அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரி 2-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று கோப்பையை வென்றது.

கிரிக்கெட் போட்டியில், அழகப்பா உடற்கல்வியியல் முன்னாள் மாணவர்கள் அணியும், அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரி அணியும் விளையாடினர். இதில் அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரி அணி 204 ரன்களும், முன்னாள் மாணவர்களின் அணி 142 ரன்களும் எடுத்தனர். இதில் 62 ரன்கள் வித்தியாசத்தில் அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

வாலிபால் இறுதி போட்டியில், அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரி அணியும், அழகப்பா உடற்கல்வியியல் கல்லூரி முன்னாள் மாணவர்கள் அணியும் விளையாடினர். இதில் அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரி அணி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது.

பெண்கள் இறுதி போட்டியில்,அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வியியல் கல்லூரி அணியும், அழகப்பா பல்கலைக்கழக அரசு கலைகல்லூரி அணியும் பங்குபெற்றது. இதில் அழகப்பா அரசு கலைகல்லூரி 2-0 என்ற செட் கணக்கில் வென்றது.

இதன் நிறைவு விழா 5.3.2017 அன்று மாலை 6.00 மணியளவில் நடைபெற்றது. முன்னாள் மாணவர்களின் தலைவர் திரு. சீனிவாசன் வரவேற்புரை வழங்கினார். அழகப்பா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேரா. சொ. சுப்பையா அவர்கள் தலைமை உரையாற்றி, வெற்றி பெற்ற வீரர், வீராங்கணைகளுக்கு கோப்பையை வழங்கினார்.




உடற்கல்வியியல் கல்லூரி முன்னாள் முதல்வர் முனைவர் ஆதிச்சன், முன்னாள் பேராசிரியர் சிவராமகிருஷ்ணன், முனைவர் ஜம்புலிங்கம் மற்றும் உடற்கல்வியியல் கல்லூரியைச் சார்ந்த பேராசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். திரு. பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

பேரா.வி. பாலச்சந்திரன்
பதிவாளர் (பொ.)